


# ஆன்லைன் தகவல் திருட்டும் ஃப்ரீ சாஃப்ட்வேரும்!



✒ டி.ரஞ்சித்
📷 ஆ.வின்சென்ட் பால்

“தகவல் திருட்டை (Data Theft) வைத்து பணத் திருட்டு, மோசடி... ஏன், ஒரு நாட்டின் தேர்தலையே திசை திருப்பக்கூடிய ஆன்லைன் அட்ராசிட்டிகள் உலகநாடுகளையே கவலை கொள்ள வைத்துள்ளன.

ஆனால், ஆதார், ரேஷன் கார்டு போன்ற தகவல் திருட்டு இல்லாமலேயே ஒருவர் இது போன்ற சிக்கல்களில் மாட்டிக் கொள்ளலாம் என்பதை பலர் புரிந்து கொள்வதில்லை.

உதாரணமாக, கூகுள் போன்ற ஒரு சாஃப்ட்வேரின்







உரிமை (propriety) ஒரு சில தனி நபர்கள் அல்லது நிறுவனத்திடம் இருக்கும்போது அந்த சாஃப்ட்வேர்களை நாம் வெறுமனே டச் பண்ணினாலே போதுமானது.

இந்த பாதுகாப்பு அற்ற தன்மையை களைவதற்காகவும், ஒரு தொழில்நுட்பம் ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் இருக்கவேண்டும் என்பதற்காகவும் தொடங்கப்பட்டதுதான் சுதந்திரமான மென்பொருள் அல்லது கட்டற்ற மென்பொருள் இயக்கம் (*Free Software Movement*).

இது 1985களில் அமெரிக்காவில் தொடங்கப்பட்டது. இந்தியாவிலும் இதுபோன்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் இதன் கிளை அமைப்பின் பெயர் ஃப்ரீ சாஃப்ட்வேர் ஃபவுண்டேஷன் (*Free Software Foundation Tamilnadu*)...” என்று இன்ட்ரோ கொடுக்கும் பூரஜித், இந்த கிளை அமைப்பின் நிர்வாகிகளில் ஒருவர்.

“ஃப்ரீ என்றால் இலவசமானது என்று நினைத்துவிடலாம். இலவசம் தான். அத்தோடு சுதந்திரமானதும் (*FREEDOM*) கூட. உரிமையுள்ள மென்பொருட்கள் மாதிரி இலவசம் என்று சொல்லிக்கொண்டு நம்மைக் கண்காணிப்பதும், தொடர்வதும் (*troll*), பொருட்களை விற்க தொந்தரவு செய்வதும், அல்லது நம் தகவல்களைத் திருடிக்கொண்டு மோசடிகளில் ஈடுபடுவதும் சுதந்திரமான மென்பொருட்களில் நடக்காது.

காரணம், இரண்டுக்கும் இடையே தொழில்நுட்ப ரீதியாக இருக்கும் சோர்ஸ் கோட் (*Source Code*) எனும் வித்தியாசம்...” என்று சொல்லும் பூரஜித் அந்த வித்தியாசங்களையும் விளக்கினார்.



பூரஜித்

“உரிமையுள்ள மென்பொருட்களை க்ளோஸ்ட் சோர்ஸ் கோட் (*Closed Source Code*) - அதாவது மூடிய மென்பொருள் என்பார்கள். சுதந்திரமான மென்பொருட்கள் ஓபன் சோர்ஸ் கோட் (*Open Source Code*) - அதாவது திறந்த மென்பொருள் என்பார்கள்.

இரண்டுமே உருவாக்கப்படும்போது ப்ரோகிராம் மொழியில்தான் எழுதப்பட்டிருக்கும். ஆனால், க்ளோஸ்ட் கோட் மென்பொருள் எந்தமுறையில் எழுதப்பட்டிருக்கிறது என்று ஒரு பயனாளி தெரிந்து கொள்ளமுடியாது. தெரிந்துகொள்ளும் வசதி ஓப்பன் சோர்ஸ் கோட் மென்பொருளில் மட்டுமே இருக்கும்.

க்ளோஸ்ட் சோர்ஸ் மென்பொருட்கள் பல பாதுகாப்பானது (என்கிரிப்ட்) என்று விளம்பரம் செய்தாலும் அதில் நாம் இடும், தேடும் அல்லது சேகரிக்கும் தகவல்கள் எங்கே போகிறது என்று ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாது.



**தொழில்நுட்பம் என்பது இரண்டு பக்கம் வெட்டும் கத்தி. அதை சரியாக அளிக்கும் போதுதான் அது சரியான வேலையை செய்யும்.**

இதனால்தான் க்ளோஸ்ட் சோர்ஸ் கோட் மென்பொருட்கள் ஆபத்தானது, பாதுகாப்பற்றது, ஆன்லைன் மோசடிகளுக்கு இடம்கொடுக்கும் என்று சொல்கிறோம்...” என்று சொல்லும் பூரஜித்திடம் ‘இருந்தாலும் வாட்ஸ் அப், ஃபேஸ்புக், விண்டோஸ் போன்ற உரிமையுடைய மென்பொருட்கள்தானே மக்கள் அதிகமாக பயன்படுத்தும் பொருட்களாக இருக்கிறது’ என்றோம்.

“ஸ்மார்ட்ஃபோன், சூப்பர் கம்ப்யூட்டர், ஏடிஎம், சர்வர்கள் மற்றும் வெப்சைட்டுகள் எல்லாமே சுதந்திரமான மென்பொருட்களால்தான் இயங்குகிறது.

விண்டோஸ் என்பது ஒரு ஆபரேட்டிங் சிஸ்டம். அதாவது இயங்குதளம். இதற்கு ஈடாக லினக்ஸ் (*linux*) பல உலக நாடுகளில் பிரபலமாகிக் கொண்டிருக்கிறது. ஏன், வாட்ஸ் அப்புக்கு இணையாக சிக்னல் என்ற ஒரு சுதந்திரமான

மென்பொருள்கூட இருக்கிறது. ஆப்புகளை தரவிறக்கம் செய்யும் கூகுள் பிளேவுக்கு பதிலாக எஃப்ட்ராய்ட் (*fdroid*) என்ற ஒரு மென்பொருள் இருக்கிறது.

இது கூகுள் ப்ளேயில் இருப்பது மாதிரி சிலது இலவசம், சிலது விலையுள்ள ஆப்புகள் மாதிரி இல்லாமல் எல்லாமே இலவசமாக சுதந்திர மென்பொருட்கள் மாதிரி ஓப்பன் சோர்ஸ் கோட் முறையில் வடிவமைக்கப்பட்டது...” என்று சொல்லும் பூரஜித், ஓப்பன் சோர்ஸ் கோட் எப்படி பாதுகாப்பானது, அதையும் தாண்டி என்னவெல்லாம் செய்கிறது என்று விவரித்தார்.

“ஓப்பன் சோர்ஸ் கோட் என்று சொல்லும்போது ஒரு பயனாளர் அந்த மென்பொருள் எப்படி ப்ரோகிராம் செய்யப்பட்டிருக்கிறது - அதாவது நிரல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளமுடியும். இதனால்தான் ஒரு சுதந்திரமான மென்பொருள் 4 வேலைகளை சுதந்திரமாகச் செய்யமுடியும்.

அவை: 1. சுதந்திரமான பயன்பாடு. அதாவது எல்லோருமே பயன்படுத்திக்கொள்வதற்கான உரிமை (*use*).

2. அந்த மென்பொருளை திறந்து பார்த்து அது எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது என்று ஒருவர் கற்றுக்கொள்ளும் (*study*) உரிமை.

3. ஒரு மென்பொருளை ஒரு பயனாளர் மெருகேற்றுவதற்கான (*modify*) உரிமை.

4. ஒரு மென்பொருளை இன்னொருவருக்கு ஷேர் (*share*) அதாவது பகிரும் உரிமை.

இப்படி ஒரு சுதந்திரமான மென்பொருளை 4 விதமாக ஒரு பயனாளி பயன்படுத்தும்போது அந்த மென்பொருள் எல்லோருக்கும் சொந்தமானதாக மாறிவிடுகிறது.

இப்படி இருக்கும்போது அந்த மென்பொருளின் குறைகள் நீக்கப்பட்டு நிறைகள் ஒரு சமூகத்துக்கு முழுமையாகக் கிடைக்கும். இது ஒரு தொழில்நுணுக்கத்தின் மேம்பாட்டுக்கும், ஒரு சமூகத்தின் மேம்பாட்டுக்கும் உடனடியான பயன்களைக் கொண்டு போய்ச் சேர்க்கும்...” என்று சொல்லும் பூரஜித் சுதந்திரமான கட்டற்ற மென்பொருள் குறித்து மக்கள் விழிப்படைய வேண்டிய தேவையையும் வலியுறுத்தினார்.

“இன்று தமிழ்நாட்டில் எங்களைப் போன்ற சுதந்திரமான மென்பொருட்களுக்காக வாதிடும் இயக்கத்தினர் கல்லூரி, சில தனியார் நிறுவனங்களிடம் சென்று இந்த தொழில்நுட்பம் பற்றி பேசிவருகிறோம்.



> ஆன்லைன் பிரச்னைகளை சமாளிக்க வேண்டுமென்றால் ஒரு தொழில்நுட்பத்தால் மட்டுமே முடியாது.







சில கல்லூரிகளில் சில இலவச மென்பொருட்களை கல்வி சார்ந்து ஒரு ஓப்பன் சோர்ஸாக நிறுவி வருகிறோம். இந்தியாவில் சில மாநிலங்கள் இந்த முயற்சியில் இப்போது இறங்கியுள்ளன. உதாரணம் கேரள மாநிலம். அண்மையில் கல்வி தொடர்பாக சில சுதந்திரமான மென்பொருட்களை அரசு சார்பாக நிறுவியிருக்கிறது.

அண்மையில் தமிழக அரசு கூட இலவச லாப்டாப்புகளை மாணவர்களுக்கு கொடுத்தபோது எங்கள் நிறுவனம் அரசிடம் லினக்ஸ் பற்றி எடுத்துரைத்தோம். இதனால் அந்த லாப் டாப்களில் உரிமையுள்ள விண்டோஸுடன் சுதந்திரமான லினக்ஸ் இயங்குதளமும் இரண்டாம் தளமாக நிறுவப்பட்டது.

உண்மையில் இந்தியா, டிஜிட்டல் இந்தியா என்று தொடர்ச்சியாக சொல்லி வந்தாலும் அரசு நிறுவனங்களிலாவது (ஈகவர்மெண்ட்) இந்த சுதந்திரமான மென்பொருட்கள் இடம் பெறும்போதுதான் மக்கள் பாதுகாப்பாகவும், ஆக்க முயற்சிலும் இறங்குவார்கள்.

ஆன்லைன் பிரச்னைகளை சமாளிக்க வேண்டுமென்றால் ஒரு தொழில்நுட்பத்தால் மட்டுமே முடியாது. ஏனென்றால் வெறும் தொழில்நுட்பம் என்பது இரண்டு பக்கம் வெட்டும் கத்தி. அதை சரியாக சமூகத்துக்கு அளிக்கும்போதுதான் அது சரியான வேலையைச் செய்யும். இதை சுதந்திரமான மென்பொருட்களால்தான் சாத்தியமாக்க முடியும்...” அழுத்தமாகச் சொல்கிறார் பூரஜித்.